திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே மணல் குவாரிகளை அரசே ஏற்று நடத்துகின்ற வகையிலே ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டுவந்ததைப் போல கிரானைட் குவாரிகளையும் அரசே ஏற்று நடத்த முன்வருமா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 15, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

15—

குடிநீர் ஆதாரங்கள்

***5336—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர் ஆதாரங்களை உருவாக்க அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரின் குடிநீர் வழங்கலை மேம்படுத்தும்பொருட்டு சென்னை நகருக்குக் குடிதண்ணீர் கொண்டு வரும், சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-1-ன் பணிகள் 720 கோடி ரூபாய் செலவில் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-2-ன்கீழ் 110 கோடி ரூபாய் செலவில் பாலாற்றின் குறுக்கே வயலூரில் தடுப்பணை கட்டி நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டரும் மற்றும் செங்கற்பட்டு கொளவாய் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டரும் நீர் கொண்டு வரும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 நவம்பர் 3]

மேலும் சென்னை குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-3 உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் 7.5 கோடி ரூபாய் செலவில் மாதவரம், இரட்டை ஏரி, கொரட்டூர் மற்றும் அம்பத்தூர் ஏரிகளின் கொள்ளளவை அதிகரிக்க, தூர் வாரும் பணி மற்றும் கரைகளை உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. கொசத்தலையாற்றின் குறுக்கே, திருத்தண்டலம் அருகில் ஒரு தடுப்பணை கட்டுவதற்கும், மேலும் அந்த ஆற்றில் ஏற்கெனவே உள்ள வல்லூர் அணைக்கட்டைச் சீரமைத்து மதகுகள் பொருத்துவதற்குமான பணி 87.5 கோடி ரூபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் கூடுதலாகக் கிடைக்கும். ஆரணியாறு, கொசத்தலையாறு படுகையில் நிலத்தடி நீர்வளம் அதிகபட்சம் எவ்வளவு இருக்கிறது என்பதற்கான ஆய்வு, உலக வங்கி நிதியுதவியுடன் தொடங்கப்பட்டு, முதல் கட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன. இதற்கான அறிக்கை பெறப்பட்டு, மேலும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடல் நீரிலிருந்து குடிநீர் பெறுவதற்காக நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர், 200 மில்லியன் லிட்டர், 300 மில்லியன் லிட்டர் வழங்கும் திறன்கொண்ட நிலையத்தை ஒப்பந்தக்காரர் தன் சொந்தச் செலவிலே வடிவமைத்து, கட்டுவித்து, இயக்கி, பராமரித்து, பிறகு சென்னை குடிநீர் வாரியத்திடம் ஒப்படைக்கும் பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்தங்கள் 14-11-2003 அன்று பெறப்பட உள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைவாழ் மக்களின் குடிநீர்த் தேவையை நிரந்தரமாகவும் முழுமையாகவும் போக்குகின்ற வகையில் தொலைநோக்குப் பார்வையில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் ஆதாரங்களைப் பொறுத்தமட்டில் தமிழகம் முழுமைக்கான கேள்வியை நான் கேட்டிருந்தேன். இருந்தாலும், நான் சென்னை நகர் உறுப்பினர் என்ற காரணத்தினாலே, சென்னை நகரைக் குறிப்பிட்டு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். நிரந்தரமான தீர்வு என்று சொல்கின்றபோது, இதுவரையிலே நாம் எடுத்த முயற்சிகள் எல்லாம்

மழை நீரை நம்பியும், நிலத்தடி நீரை நம்பியும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. இப்போது கடல் நீரை நிரந்தரமாகக் குடிநீராக ஆக்குகின்ற முயற்சிக்காக ஒப்பந்தங்கள் கோரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. உலகளாவிய அளவில் ஒப்பந்தங்களைக் கோருகின்றபொழுது, கொடுத்திருக்கின்ற கால அவகாசம் போதுமானது இல்லை என்ற ஒரு கோரிக்கை இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படி அந்த ஒப்பந்தத்தை இன்னும் சரியான முறையிலே எடுத்துக்கொள்வதற்கு கால அவகாசம் கொடுக்கப்படுமா என்பது ஒரு கேள்வி. அடுத்ததாக, நிரந்தரமாக இதுவரையிலே ஒகேனக்கலிலே இருந்து நீர் கொண்டு வருவதற்கான முயற்சி எடுக்கப்படவில்லை. காவிரியினுடைய நுழைவாயிலாக ஒகேனக்கல் இருக்கின்றது. ஒகேனக்கல் எந்தக் காலத்திலும் வறட்சியில் உட்பட்டது இல்லையென்று சொல்லப்படுகின்றது. அப்படியானால் ஒகேனக்கலிலே இருந்து சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டுவருவதற்கான திட்டத்தை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்குக் கால அவகாசம் வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவையில் கேள்வி வைத்தார். ஏற்கெனவே கடந்த நான்கு மாத காலமாக அந்த ஒப்பந்தப்படிவங்கள் வரப்பெற்று, இரண்டாம் கட்டமாக தற்சமயம் அவர்கள் ஒப்பந்தப்படிவங்கள் தரவேண்டுமென்று, அரசின் மூலமாகக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இரண்டாம் கட்டமாகக் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்றுவரையில் 10 ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்படிவங்கள் வழங்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே கால அவகாசம் நீட்டிப்புச் செய்வது இயலாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இங்கே கேள்வி வைத்தார். உலக வங்கிக் கடன் பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று, இந்த அரசு அதற்கான முயற்சிகளை முன்மொழிந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரைக் குடிநீராக்குகின்ற முயற்சி என்பது இந்தியாவிலேயே முதல் முறையாக எடுத்துக்கொள்ளப்படுகின்ற முயற்சி. இதிலே முதல்வர்

2003 நவம்பர் 3]

அவர்களும் சிரத்தை எடுத்திருக்கின்றார்கள் என்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படியானால் மிக்க நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் ஒப்பந்தம் கொடுக்கின்ற அளவிற்கு முயற்சி சரியாக இருப்பதற்காகத்தான் கால அவகாசம் கொடுக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டேன். ஆகவே இன்னும் ஆழ்ந்த பரிசீலனையோடு அது செய்யப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-45

***மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெரிய மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகக் கடல் நீரை நன்னீராக்கும் ஒரு திட்டத்திற்காக ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும்போது, அதுவும் global tender உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும்போது ஆழ்ந்த சிந்தனை, பரிசீலனைக்குப் பிறகுதான் அரசு இத்தகைய ஒரு முடிவை மேற்கொள்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே ஒரு முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பெற்று, இரண்டு நிறுவனங்கள் தான் ஒப்பந்தப்புள்ளிகள் தந்திருந்தன. அந்த இரண்டிலும் சில நடைமுறைக் குறைகள் procedural lapses இருப்பதாகத் தெரிவித்து இரண்டையும் ஏற்க இயலாது என்று அதிகாரிகள் தெரிவித்ததால் அந்த டெண்டர் ரத்து செய்யப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகளை கோரப்பட்டு re-tender விடப்பட்டுள்ளது. இப்போது மாண்புமிகு அமைச்சர் தெரிவித்ததுபோல் ஏறக்குறைய 10 புகழ்பெற்ற நிறுவனங்கள் ஒப்பந்தப் படிவங்களை வாங்கியிருக்கின்றன. இன்னும் கால அவகாசம் நீட்டிக்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். கால அவகாசம் நீட்டிப்பதால் எந்த பிரத்தியேக நன்மையும் ஏற்படப் போவதாகத் தெரியவில்லை. இந்தக் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை எவ்வளவு விரைந்து செயல்படுத்த முடியுமோ அவ்வளவு நல்லது என்று இந்த அரசு கருதுகிறது. ஏற்கெனவே கடந்த 3 ஆண்டுகளாக சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளின் catchment area-வில் போதுமான மழை இல்லாததால் இங்கே சென்னை மாநகரில் சென்னை வாசிகளுக்குக் குடிநீர் வழங்க இந்த அரசு எவ்வளவு அல்லல்பட்டிருக்கிறது என்பதெல்லாம் பலமுறை இந்த அவையிலேயே எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது; மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியும். ஆகவேதான் நாம் எதிர்பார்த்தபடி மழை பெய்யாததாலும், நாம் அண்டை மாநிலத்திலிருந்து எதிர்பார்த்த குடிநீரும் வராததாலும் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை எவ்வளவு விரைந்து செயல்படுத்த

முடியுமோ அவ்வளவு விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. இருப்பினும் Tender Act-ன்படி என்னென்ன விதிமுறைகள் கூறப்பட்டுள்ளனவோ அவற்றின்படிதான் இந்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 16, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

16—

சமூக நலக் கூடங்கள்

***36944—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 60-க்கும் மேற்பட்ட சமூக நலக் கூடங்களை மக்கள் தங்கள் இல்ல நிகழ்ச்சிகளுக்கு அதிக அளவு பயன்படுத்தாத நிலையை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 47 சமூக நலக் கூடங்கள் சென்னை மாநகரில் உள்ளன. இவற்றில் 38 சமூக நலக் கூடங்கள் மக்களால் அவர்களது இல்ல நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 9 சமூக நலக் கூடங்கள், குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் சமூக நலக் கூடங்களின் வழியோரங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளது, கழிப்பிடங்களுக்கு அருகில் உள்ளது, கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது போன்ற காரணங்களால் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளன. மேற்படி பயன்பாட்டில் இல்லாத 9 சமூக நலக் கூடங்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசால் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே 38 சமூக நலக் கூடங்கள் பயன்பாட்டிலும், மீதம் 9 சமூக நலக் கூடங்கள் பயன்படுத்த